**<u>சுருக்கம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை– சீர்மரபினர் நலவாரியம்–பல்வேறு நல உதவிகள் செயல்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளுக்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(பிந 3) துறை</u>**

அரசாணை (நிலை) எண்: 107 நாள்: 28.10.2008

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.13, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 20.4.2007.
2. அரசாணை (நிலை) எண்.29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 28.3.2008.
3. அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 12.8.2008
4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கடிதம் எண்.எப்.1/3201/2007 நாள் 28.10.2008.

* * * * * *

**<u>ஆணை:-</u>**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சீர்மரபினர் சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் இவ்வாரியத்தில் பதிவுசெய்துகொள்ளும் உறுப்பினர்களுக்கும் வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வாரிய உறுப்பினர்கள் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள், விண்ணப்பிக்கும் முறை, விண்ணப்பப் படிவங்கள் ஆகியவை வரையறுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. மேலே நாலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை ஏற்று, மேற்காண் வழிகாட்டி நெறிமுறைகளில் முதியோர் ஓய்வூதியம் குறித்த நெறிமுறைகள், உறுப்பினரின் மகன்/மகள், 10–ம் வகுப்பு/ 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவம் மற்றும் மகன் / மகள் திருமண உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் ஆகிவற்றிற்கு கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

## திருத்தங்கள்

1. முதியோர் ஓய்வூதியத்திட்டம் குறித்த நெறிமுறைகளில் தகுதி என்ற தலைப்பின் கீழ் வரும்

"ஒவ்வொரு பதிவு பெற்ற உறுப்பினருக்கும் 5 ஆண்டுகள் தொடர்ந்து தொழிலாளராக வேலை செய்து 60 வயது பூர்த்தி செய்திருந்தால் முதியோர் ஓய்வூதியம் பெறத்தகுதி உடையவர்" என்பதற்குப்பதிலாக "வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் 60 வயது பூர்த்தி செய்திருந்தால் முதியோர்ஓய்வூதியம் பெறத்தகுதி உடையவர் " என வாசிக்கவும்.

2. உறுப்பினரின் மகன் / மகள் 10–ம் வகுப்பு/ 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவத்தில் சான்று என்ற தலைப்பின் கீழ் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான நிபந்தனைகளில் இனம் (ஆ)–வில் இடம் பெற்றுள்ள "வாரியத்தில் பதிவு செய்த தேதியிலிருந்து கல்வி உதவித்தொகை கோரும் தேதி வரை ஓராண்டு முடிந்திருக்கவேண்டும்" என்பது நீக்கம் செய்யப்படுகிறது.

3. சான்று என்ற தலைப்பின் கீழ் இனம் 'இ' என்றிருப்பதை 'ஆ' என்று மாற்றம் செய்யப்படுகிறது.

4. உறுப்பினர் மகன் /மகள் திருமண உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தில் திருமண உதவித்தொகை பெறுவதற்கான நிபந்தனைகள் என்ற தலைப்பின் கீழ் இனம் (அ) வில் உள்ள "விண்ணப்பதாரார் பதிவு பெற்ற தேதியிலிருந்து அவரது எந்த மகன் / மகள் திருமணத்திற்கான உதவித்தொகை கோருகிறாரோ அந்த தேதி வரை ஓராண்டு காலம் முடிவு பெற்றிருக்கவேண்டும் " என்பது நீக்கம் செய்யப்படுகிறது.

5. இனம் ஆ, இ, மற்றும் ஈ என இருப்பவை முறையே அ, ஆ மற்றும் இ என்று மாற்றம் செய்யப்படுகிறது.

6. மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் வழிகாட்டி நெறிமுறைகள் குறித்த அரசாணை வெளியிடப்பட்ட 12.8.2008 முதல் செயல்பாட்டிற்கு வரும்.

**( ஆளுநரின் ஆணைப்படி )**

**ந. வாசுதேவன்,**
**அரசுச் செயலாளர்.**

## பெறுநர்

ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,சென்னை.–5
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
சீர்மரபினர் நல வாரியத்தின்தலைவர், துணைத்தலைவர் மற்றும்
அனைத்து அலுவல்சாரா உறுப்பினர்கள்(சீர்மரபினர் நல வாரிய
உறுப்பினர் – செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர்கள்
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.

இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம். சென்னை–2.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9,
மாநில கணக்காயர், சென்னை18/35
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை.–5
நிதி (வரவு–செலவு பொது I,II)/வருவாய்/பள்ளிக்கல்வி/பி,மிபி,சந )துறைகள், சென்னை–9.
தொழிலாளார் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**